**செய்தி வெளியீடு :466** **நாள் 06.07.2020**

# மாண்புமிகு முதலமைச்சரின் உறுதியான நடவடிக்கையால் குணமடைந்து வீடு திரும்புவோர் எண்ணிக்கை 62 சதவீதமாக உயர்ந்துள்ளது மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் தகவல்

இன்று (06.07.2020) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் கோடம்பாக்கம் மற்றும் அண்ணாநகர் மண்டல பகுதிகளில் நடைபெற்ற வரும் மருத்துவ முகாம்களை நேரில் ஆய்வு செய்தும் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் மேற்கொண்டார்கள்.

தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாடு அரசு கொரோனா நோய் தொற்றை கட்டுப்படுத்த பல்வேறு பகுதிகளில் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை மிக சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கோடம்பாக்கம் காமராஜ் காலனியில் நடைபெற்ற மருத்துவ முகாமை ஆய்வு செய்தார்கள், பின்னர் பொது மக்களுக்கு முககவசம், கபசுர குடிநீர் மற்றும் கையேடு ஆகியவற்றை வழங்கினார்கள். அதனை தொடர்ந்து மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசுகையில் மாண்புமிகு அம்மாவின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை இந்திய திருநாட்டில் ஒரு முன் உதரணமாக தன்னுடைய செம்மையான, உறுதியான நடவடிக்கையின் மூலம் கொரோனா தொற்று ஏற்பட்டவர்களில் அதிக எண்ணிக்கையில் சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பி செல்கின்ற நிலை உருவாக்கியிருக்கிறார்கள்.

இதுவரை சென்னை மாநகராட்சியில் 12712 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது இதன் மூலம் 820358 நபர்கள் பயனடைந்து உள்ளனர். அதில் 38280 அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது, அவர்களுக்கு உடனுக்குடன் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டதால் தான், பாதிக்கப்பட்டவர்களின் 62 சதவீதம் பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பி சென்றியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி எங்களை போன்ற அமைச்சர்களை சட்டமன்ற உறுப்பினர்களுடன் ஒருங்கிணைந்து 15 மாநகராட்சி மண்டலங்களில் மூன்று மண்டலங்களுக்கு ஒரு அமைச்சர் என்ற வகையில் கொரோனா தடுப்பு பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

மாநகராட்சியில் தொற்று எண்ணிக்கை குறைந்துக் கொண்டு இருக்கிறது, உதரணமாக கோடம்பாக்கம் மண்டலத்தில் 14 நாட்களுக்கு முன்னர் பாதிக்கப்பட்ட தெருக்கள் 2414 ஆகும் இதில் தற்போது 990 தெருக்கள் பாதிப்பே இல்லாமல் இருக்கிறது, ஒருவருக்கு கூட தொற்று ஏற்படவில்லை இவையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த உறுதியான நடவடிக்கையால் மருத்துவ ரிதியான வெற்றி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதம் 6, 7, 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் வீடுகளுக்கு சென்று டோக்கன் வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி வழங்கப்படுகிறது. பொது மக்கள் தங்களுக்கு வேண்டிய அத்தியாவசிய பொருட்களை 10ம் தேதி முதல் வாங்கி கொள்ளாலம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துவிட்டார்கள்.

தமிழகத்தில் பொருத்தவரை உணவு பற்றக்குறை என்ற பேச்சுக்கே இடமில்லை இப்பொழுது கிடங்குகளில் மூன்று மாதத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் உள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார். பின்னர் மண்டலம் 10 அலுவலகத்தில் மண்டலம் 10 தொடர்புடைய அனைத்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மண்டலம் 9 நெல்சன் மாணிக்கம் சாலையில் அமைக்கப்பட்டு இருந்த மருத்துவ முகாம் அருகில் இருந்த நடமாடும் சுவாப் பரிசோதனை மையத்தில் நடைபெறும் பரிசோதனை குறித்து கேட்டறிந்தார்கள். பின்னர் அங்கு அமைக்கப்பட்டிருந்த மருத்துவ முகாமை ஆய்வு செய்து பொது மக்களுக்கு முககசம், கபசுர குடிநீர் மற்றும் கையேடு ஆகியவற்றை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளின் போது தி.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.சத்யா, மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் டாக்டர். எஸ். வினீத், இ.ஆ.ப., திரு. கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப துணை காவல் கண்காணிப்பாளர் திரு எம்.எஸ் முத்துசுவாமி, இ.கா.ப, திருமதி. கே.மீனா, இ.கா.ப., திரு. சி. கலைசெல்வன், இ.கா.ப., திருமதி எஸ். சாந்தி, இ.கா.ப., மண்டல அலுவலர்கள் திரு.ஜெய்பீம், திரு. கே. சுந்தர்ராஜன் மற்றும் தொடர்புடைய மண்டல அலுவலர்களும் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**